வரும் நன்றாக அறிவார்கள். ஆகவே தனியாருக்கும் அரசுக்கும் தொழிற்கூடங்கள் நடத்துவதிலே வேறுபாடுகள் இருக்கின்றன என்பது இங்குள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே இந்தத் துறையைப் பொறுத்தவரையில் ரப்பர் தொழிற்கூடங்கள் சிறப்பான முறையில் சிறந்து விளங்குவதற்கு வேண்டிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. தனியாரைப்போல் இலாபத்தை ஈட்டுவதற்குரிய வகையில் விரைந்து செயலாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 29. திரு. ஆர். டி. அரங்கநாதன். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

29—

விருத்தசாலத்தைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு பேருந்து வசதி

* 4740. திரு. ஆர். டி. அரங்கநாதன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விருத்தாசலம் நகரை மையமாகக்கொண்டு சுற்றிலும் உள்ள கிராமங்களுக்கு போதிய பேருந்து வசதி இல்லையென்பதை அரசு அறியுமா ?

(ஆ) எல்லா கிராமங்களுக்கும் விரைவில் புதிய பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விருத்தாசலம் பணிமனை மூலமாக தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், விருத்தாசலத்தை மையமாகக் கொண்ட கிராமங்களுக்கு பேருந்து வசதிகளை அளித்து வருகிறது. பேருந்து வசதி பெறாத கிராமங்களுக் கெல்லாம், அக்கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்த வுடன் பேருந்துகளை அங்கே விடுவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

திரு. ஆர். டி. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் தொகுதியில் விருத்தாசலம் நகரைச் சுற்றியுள்ள நூற்றுக்கு மேற்பட்ட கிராமப் பொதுமக்கள் விவசாய

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1992 பிப்ரவரி 4

விளைபொருட்களைக் கொண்டு வந்து விற்கவும், அத்தியாவசியப் பொருட்களை வாங்கிச் செல்லவும், அதுமட்டுமல்லாமல் மக்கள் பொது மருத்துவமனைக்கு வந்து செல்வதற்கும் உரிய இடமாக இருக்கிறது. அரசின் அலுவல் சம்பந்தப்பட்ட வேலைகளுக்காகவும் வந்து கூடுகின்ற இடமாக இருப்பதோடு மட்டுமல்லாமல் மிக முக்கிய நகரமாக விருத்தாசலம் விளங்குகிறது. தற்போது மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் விழுப்புரம் நகருக்கு வருகை தந்தபோது எனது தொகுதியில் சில கிராமங்களுக்கு பேருந்து வசதி செய்து கொடுத்தார்கள். அதற்கு எனது தொகுதி மக்கள் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அதேபோல் மீதம் உள்ள கிராமங்களுக்கும் பேருந்து வசதிகளைச் செய்து கொடுக்க அரசு முன்வர வேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களையும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையும் எனது தொகுதியின் மக்கள் சார்பாகக் கேட்டுக் கொண்டு அதற்கு அரசு முன்வருமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலத்தைப் பொறுத்த வரையில் 19 புறநகர் பேருந்துகளும், 47 நகரப் பேருந்துகளும் இப்போது இயக்கிக் கொண்டிருக்கிறோம். அருகாமையில் உள்ள பணிமனைகளிலிருந்து விருத்தாசலத்திற்குக் கூடுதலாக 22 பேருந்துகள் இப்போது இயக்கிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய தமிழக அரசின் ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் விழுப்புரம் நிகழ்ச்சி நடைபெறுகிறபோது ஒரே நாளில் 72 பேருந்துகள் தென்னாற்காடு மாவட்டத்தில் இயக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசைப் பொறுத்தவரையிலும் 1992 நவம்பர் முடிவதற்குள் 1000 மக்கள் தொகை இருக்கிற அத்தனை கிராமங்களுக்கும் பேருந்து வசதிகளைச் செய்வதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதைப் பணிவுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 30. திரு. ஏ. டி. செல்லசாமி. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.